அறிவினு னுகுவ துண்டோ பிறிதினேய்
தந்நோய்போற் போற்ருக் கடை.—(குறள்.)

“From Wisdom's vaunted lore what doth the learner gain
If as his own he guard no other's souls from pain.”

TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்
ஜீவகாருண்ணிய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் I.] **MARCH**, 1901 ௵ மார்ச்சு. [இலக்கம். 2.

மாட்சிமைதங்கிய மகாரா[illegible]யாரது மரணம்.

சரமகவி.

உலகாளு மன்னவர்க்குச் சக்கரவர்த் தினியாகி யுற்றிருந்தும்,
வலமாகத் தமைக்காத்துக் கொளுமியல்பும் பிறர்க்குரைக்க வாயுமில்லாப்
பலஜீவ ராசிகள்பாற் கருணைவைக்குஞ் சங்கத்திற் பரிவுபூண்ட
குலமாது விக்டோரியா பரலோகஞ் சென்றதுநங் குறைதானன்றோ.

இச்சஞ்சிகையை நாம் முடிக்கப்போகிற தருணத்தில் "மாட்சிமை தங்கிய மகாராணியார் மரணமடைந்தார்; நம்மகாராஜாவைக் கடவுள் கடாக்ஷிப்பாராக" என்று அனைவருக்கும் ஆறாத் துயரமுண்டாக்குகிற துக்கச்செய்தியான விளம்பரமொன்று எங்கும் பிரசித்தம் செய்யப்பட்டது. அதனால், இச்சஞ்சிகையில் நாம் சேர்க்க நினைத்திருந்த வேறு சிறுவிஷயங்களை நிறுத்தி, நம்மகாராணியாரது மரணத்தினா லுண்டான நமது விசனத்தை வெளியிட இங்கே இந்த ஸமாசாரத்தைச் சேர்க்கலானோம். தமது நாட்டுக் குடிகள் அனைவருடைய ஆசைக்கு இடமானவரும், உலகத்தாரனை[illegible]ராலும் புகழ்ந்து கொண்டாடப்பட்டவருமா[illegible]ரியா மகாராணியாரே நமது சங்கத்[illegible] நற்காரியங்களுக்கு ஆதிபோஷக[illegible]ருந்தவராதலால், அவரது மரணம் நமக்[illegible]தத்திரமேயன்றி, நமது சங்கத்தின் சாகைகள் (கிளைகள்) ஐந்நூறிலும் சம்பந்தப்பட்ட சகலமானவர்களுக்கும் என்றும் ஆறாத விசனத்தை உண்டாக்குகின்றது. அம்மகாராணியாரது ஆட்சியைக் கைக்கொண்ட மாட்சிமைதங்கிய நமது நூதன ராஜசக்கரவர்த்தியும் அரசாணியும் தமது தாயார் சென்றவழியே பின்பற்றி நடப்பார்களென்றும், தமது தாயார் வாழ்நாள் முழுமையும் செய்துவந்ததுபோலவே இவர்களும் இச்சங்கத்தாரது கொள்கைகளையும் நோக்கங்களையும் அங்கீகரித்து ஆமோதித்திருக்கிறார்களென்றும், நன்றாகத் தெரிந்திருந்தும், மகாராணியாருடைய மரணத்தினால் நேர்ந்த நஷ்டம் யாவருடைய மனத்தையும் மிகவும் வருத்துகின்றது.

மாட்சிமைதங்கிய மகாராணியார் சிங்காதனமேறுவதற்கு இரண்டுவருஷம் முன்னமே 1835–ம் வருஷத்திலேயே நமது சங்கத்திற்குப் போஷகராக ஏற்பட்டு, தம்முடைய ஆதரணை இச்சங்கத்திற்கு அதிகமாக இருக்கிறதென்பதற்கு அறிகுறியாக 1840–ஆம் ராஜகீய சங்கம் என்னும் சிறப்புப் பெயரை இதற்கு அமைக்கும்படி அநுமதிகொடுத்தார். அதனால் பின்னும் அநேகர் நமது சங்கத்தினிடத்தில் அதிகமான நம்பிக்கை கொண்டவராகி, தம்மாலான உதவிசெய்து நமக்கு மேன்மேலும் உற்சாக முண்டாக்கலானார்கள்.

சென்ற 1874–ஆம் நமது ஜீவஹிம்சை நிவாரண சங்கத்திற்கு ஜூபிலி மகோற்சவம் கொண்டாடப்பட்டது. அந்தச்சமயத்தில் இவ்வுலகத்திலே பலவிடங்களிலுமுள்ள முக்கியமான சபைகளின் பிரதிநிதிகள் பலரும் வந்து கூடினார்கள். அந்தச் சமயத்தில் நமதுடைய மகாராணியார் இச்சங்கத்தைச் சேர்ந்த ஜீவகாருணியமான எல்லாக் காரியங்களிலும் தமக்குள்ள அபிமானத்தையும் ஆஸ்தையையும் சந்தோஷத்தையும் விளக்க விவரமான விளம்பரமொன்றுஎழுதிப் படிக்கச்செய்தார். மேலும் ஜீவஸம்ரக்ஷணை செய்கிறவர்களுக்கு வெகுமதியாகக் கொடுக்கும் முத்திரைப்பதக்கத்தின் சித்திரவேலை இத்தன்மையதா யிருக்கவேண்டுமென்று காட்டிக்கொடுத்தும் தமது அபிமானத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

பிறகு 1887–ஆம் ஜூலைமீ மகாராணியாரது அரசாட்சியின் ஜூபிலி மகோற்சவம் கொண்டாடுவதற்கு இந்தச் சங்கத்தார் மகாசபை சேர்ந்த தருணத்தில் இதனிடத்தில் மகாராணியார் விசுவாசம் வைத்திருப்பதைப்பற்றித் தமக்குள்ள நன்றியறிதலை வெளியிட்டு விண்ணப்பமொன்று எழுதிப் படித்தபோது, வாயில்லா ஜெந்துக்களிடத்தில் கருணையுள்ளவர்களா யிருப்பதே எல்லாத் தேசத்தாருக்கும் நாகரீக விருத்திக்கு முதற்படி என்று இச்சங்கத்தாரது காரியங்களைக் கொண்டாடி மகாராணியார் மறுமொழி தந்தருளினார்.

ஆதலால் 1835–ஆம் முதல் நாளதுவரையில் ஜீவஸம்ரக்ஷணைச் சங்கத்திற்குப் போஷகராயிருந்த மஹாராணியார் தேகவியோகமான துன்பத்தை மற்றச் சங்கத்தாரைவிட நாமெல்லோரும் வெளியிட்டு ஒருதன்மையாகத் துக்கம் கொண்டாடக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நீதியும் அருளுமில்லாமை.

நீதி அல்லது நியாயமாவதேன்ன? — ஒவ்வொரு பிராணிக்கும் நாம் செய்யவேண்டிய கடமையைச் செய்வதும், ஒன்றையும் துன்பப்படுத்தாமலிருப்பதுமே நியாயமென்னப்படும் என்று, சொற்களின் அர்த்தத்தை உள்ளபடி உணர்ந்த சிலர் நியாயமென்கிற சொல்லுக்குப் பொருள் சொல்லுகிறார்கள். யோசித்துப்பார்த்தால் அதுவே சரியானதென்று விளங்குகின்றது. இந்த இரண்டு விஷயங்களிலும் தவறாமல் நடப்பவர்களே நியாயமுடையவரென்று நன்குமதிக்கப்படுவார்கள்.

கடவுள் நமது கையில் கொடுத்திருக்கிற எளிய வாயில்லா ஜந்துக்களை முதலில் யோசித்துப் பார்ப்போம். அவை நமக்காக உழைக்கும் உழைப்புக்குப் பிரதியாக நாம் செய்யக் கடமைபூண்ட காரியம் ஒன்றுமில்லையோ? அவற்றை அதிகமாக

உழைக்கச் செய்யும்படி சாட்டையால் அடித்து வருத்துவதுதானோ நாம் அவற்றிற்குச் செய்ய வேண்டிய கடமை? அவை நமக்கு உழைக்க உயிர் வைத்திருப்பதற்குப் போதுமானவளவே உணவு கொடுப்பதுதவிர நாம் செய்யக்கூடியது மற்றொன்றுமில்லையோ? அந்தப் பேதைப்பிராணி மிகப் பரிதாபத்துடனே நம்மை விழித்துப் பார்ப்பதை நோக்கும்போது, அது இன்னும் சில நன்மைகளை நம்மிடத்தினின்றும் எதிர்பார்க்கிறதென்று நமக்கு நன்றாக் விளங்கவில்லையா? அதுவும் நாம் அதற்குச் செய்யவேண்டிய கடமையேயன்றி வேறல்ல. அன்பான சொற்களைச் சொல்லி அதைத் தடவித் தட்டிக்கொடுத்துக் களிக்கச்செய்வது கஷ்டமான காரியமல்லவே; இதற்காக நாமொன்றும் வருத்தப் படவேண்டுவதில்லையே. வாயில்லாத ஜீவன்களுக்கு நாம் இந்த நன்மையைமாத்திரம் தவறாமல் செய்வோமானால் அவை ஆயாஸமெல்லாம் நீங்கி ஆநந்தமடைந்தவையாகும். இது தெரியாமல் பலர் எளிய ஜந்துக்களைக் கடுஞ்சொற்சொல்லிக் கொடுமையாக நடத்துகின்றனர். "ஈகை யரிதெனினு மின்சொலினு நல்கூர்தல், ஓகோ கொடிது கொடிதம்மா!"

அநீதியின்மற்றொரு பகுதியான துன்புறுத்துதலைப்பற்றி ஆலோசிப்போம். ஒரு ஜீவனையும் துன்புறுத்தாதிருப்பதும், நியாயத்தில் சேர்ந்த நற்குணமாம். எவனாயினு மொருவன் வேண்டுமென்றாவது, துர்மார்க்கத்தினாலாவது, விளையாட்டினாலாவது ஏதேனுமொரு உயிரில்லாத பொருளைப் பாழாக்கினாலும், அழித்தாலும், கெடுத்தாலும் அது கெட்டகுணமென்று நாம் பழிக்கிறோம். ஏனென்றால், நன்றாக யோசித்துப் பார்க்குமிடத்து, அது நியாயத்திற்கு விரோதமான குற்றமாகும். எவனாவது ஒருவன் ஏதேனும் ஒரு படத்தையாயினும், ஒரு யந்திரத்தையாயினும் வேண்டுமென்று ஒடித்துவிடுவானானால், அது தண்டனைக்கு இடமான குற்றமாம். தானே செய்யாமல் ஒருவனைச் செய்யச் சொன்னாலும் அதுவும் தண்டிக்கத்தக்க குற்றமே. ஏனெனில், அதனால் உடையவனுக்கு நஷ்டமுண்டாவதுடன் மற்றவர்களையும் அதேவிதமாக கெட்ட வழியில் செலுத்த அது வழிகாட்டியாகின்றது. ஆதலால் அது ஒருவனுக்குமாத்திரமேயன்றிப் பலருக்கும் அநியாயஞ்செய்ததாகும். இதுவே இத்தன்மையானதென்றால், மற்றெவராலும் செய்ய முடியாததும், இத்தன்மையதென்று மனத்தில் அறிந்துகொள்ளவும் அசாத்தியமானதுமான ஈசுவர சிருஷ்டியை ஒருவன் வேண்டுமென்று வதைத்தாலும், துன்பப்படுத்தினாலும், அலக்ஷியஞ்செய்தாலும் அது எவ்வளவு கொடிய அநியாயமாயிருக்க வேண்டுமோ, யோசித்துப் பாருங்கள். அதினும் கொடிய அநியாயம் வேறுண்டோ? 'எளிய ஜந்துக்களை நாம் துன்புறுத்துவது ஒரு தோஷமாகுமா? அதனால் யாருக்கு என்ன உபத்திரவம் உண்டாகிறது?' என்று எவனேனும் சொல்லத் துணிவானோ? அப்படிச் சொல்லுகின்றவனுக்கு அதேவிதமான இம்சையைச் செய்துபார்த்தால் அதன் கொடுமை உடனே அவனுக்கு விளங்குமல்லவா? ஆதலால் நம்மை மற்றொருவன் இம்சிப்பது அநியாயமென்று நாம் நினைத்திருப்பதுபோலவே வாயில்லாத எளிய ஜந்துக்களை நாம் இம்சிப்பதும் அநியாயமேயென்று உணர்ந்து அவைகளைப் பக்ஷமாகப் பரிபாலித்து வரக்கடவோம்.

ஜீவகாருணியம்.—காருணியம் அல்லது அருளென்பது முன்சொல்லிய நியாயத்தினும் மேற்பட்டதான மிகச் சிறந்த நற்குணமாம். நியாயம் செல்வதற்கு வழியில்லாத விடங்களிலும் அருள் செல்வதற்கு வழியுண்டு. ஆயினும் கருணை நியாயத்திற்கு விலக்கானதன்று. கடவுள் கைக்கொண்டிருக்கிற நியாயமே கருணையாகும். ஜீவகாருணியமுள்ளவரிடத்தில் கடவுளும் கருணையுள்ளவராயிருப்பார். கடவுள் நம்மிடத்தில் கருணையுள்ளவராயிருக்கும்போது நாமேன் மற்றப் பிராணிகளிடத்தில் காருணியமுள்ளவர்களா யிருக்கலாகாது? "அருளிலார்க் கவ்வுலக மில்லை, பொருளிலார்க் கிவ்வுலக மில்லாதி யாங்கு."

குதிரை லாயங்களைப்பற்றிய திருத்தங்கள்.

(தொடர்ச்சி.)

11. ஒரு பக்கம்மாத்திரம் மூடப்பட்டிருக்கிற லாயத்தின் கூரைமீது உலர்ந்த புல்லுகளை வைக்கலாகாது. ஏனெனில், குதிரை மூச்சினாலுண்டாகும் ஆவி அந்தப்புற்களை அசுத்தபபடுத்திக் குதிரைகளின் உணவுக்கு ஏலாதபடி அருவருப்புண்டாக்கிவைக்கும்.

12. மேற்சொன்னவிதமாக அவசியம் வைக்கும்படி நேரிட்டால், லாயத்தில் தளமிட்ட மச்சுகளின்மேல் வைப்பது உசிதம். அந்த மச்சுகளும் காரையாடியிருப்பது நலம். அப்படிச் செய்வதினால் குதிரையின் ஆகாரத்தில் ஆவி சேராது.

13. குதிரைக்கு உலர்ந்தபுல் இடும்காடியில் சந்துகளில்லாமல் அடைப்படைக்கவேண்டும். அப்படி செய்யாவிடில் பக்கங்களிலுள்ள சந்துகளின் வழியாய்த் தூசுகள் பிரவேசித்து, புல்லுடன் மிசரப்பட்டு அதைத் தின்னும்போது குதிரையின் கண்களில் தூசு படிவதற்கு ஏதுவாகுமாதலால், கண்களுக்கு ஊனமுண்டாகும். மேலும் அதன் உசுவாச நிசுவாசத்தால் தூசுகள் தலையில் படிந்து சல தோஷத்திற் கிடமுண்டாகும். உணவாகிய புற்களும் அசுத்தப்பட்டுப்போம்.

14. உலர்ந்த புல்லிலிருக்கும் விதையும், தும்பும், குதிரையின் காதுகளிலும், கண்களிலும் விழுந்து

படியுமாதலால் குதிரையின் தலைக்கு நேரே புற்சமையை வைக்கக்கூடாது.

15. லாயத்திலிருக்கிற குதிரைகளை யாவரும் குறும்பாய்ச் சீண்டவாவது, தொந்தரவு செய்யவாவது விடலாகாது. எனெனில், குதிரைகள் வேதனையைமாத்திரம் உணர்கிறதேயொழிய, நாம் செய்யும் குறும்பை யறிகிறதில்லை. இப்படிச் செய்வதால் குதிரைகள் கெட்ட சேஷ்டைகளைக் கற்றுக் கொள்ளுகின்றன.

16. லாயத்திலிருக்கிற குதிரைகளை ஒருபோது மடிக்கக்கூடாது. எனெனில் இதைப்போல் அவ்வளவு துஷ்ட குணத்தைக் கற்பிப்பது வேறொன்றுமில்லை. லாயத்தில் குதிரைகளைப் பக்ஷமாய் நடத்திவந்தால் இயற்கையாயுள்ள கெட்ட குணமும் விலகும்.

17. குதிரையின் படுக்கை அடிப்புறமும், மேற்புறமும், சுத்தமாயும், உலர்ந்ததாயுமிருக்கவேண்டும். ஈரத்தில் மக்கிக்கொண்டிருக்கும் செத்தையிலிருந்து உண்டாகும் உஷ்ணமான ஆவியால் குளம்புகள் மெலிந்து குதிரை வியாதியடைந்து நொண்டியாய்ப்போம்.

18. பிரதிதினம் காலையில் லாயத்தை நன்றாய்ப் பெருக்கி, படுக்கையைச் சீர்ப்படுத்திவந்தால் 1, 10–வது பாராவில் சொல்லிய கெடுதிகள் உண்டாகமாட்டா.

19. பழைய, அதாவது நாட்பட்ட படுக்கை வைக்கோலைத் தீனித்தொட்டியி லிருக்கும்படி வைக்கக்கூடாது. அப்படி வைத்தால், அதிலிருந்துண்டாகும் அசுத்தமான காற்று குதிரையின் உணவை அசுத்தஞ் செய்வதுடன், நாசிமூலமாய்ச் சென்று, நாசியிலும், நுரை யீரலிலும் நோயுண்டாக்கிக் கண்களையுங் கெடுத்துவிடும்.

20. குதிரை மேனியாயிருக்க வேண்டுமானால் நன்றாய்த் தேய்த்துத் துடைக்கவேண்டும். பக்கங்களில் நன்றாய் மாலிசு செய்தால் தோலிலுள்ள சிறுதுவாரங்கள் திறக்கப்பட்டு, தோல் மிருதுவடைந்து, குதிரைக்கு ஆரோக்கியத்தை யுண்டுபண்ணும்.

21. குதிரையை ஒருபோதும் லாயத்தில் தேய்க்கக்கூடாது. அங்கே தேய்த்தால் அதனாலுண்டாகும் தூசி தொட்டியை அசுத்தப்படுத்தி, குதிரை தன் தீனியைத் தின்னக்கூடாதபடிக்கு அருவருப்பை யுண்டாக்கும்.

22. மிருதுவான தோலுடைய குதிரைகளைக் "காரா" ரால் தேய்க்கவேகூடாது. மற்றக் குதிரைகளைத் தேய்க்கும்போதும் வலியுண்டாக்குவதால் மெதுவாய் உபயோகப்படுத்தலாம்.

23. குளம்பில் அழுக்குச் சேர்ந்திருந்தால் ஊன் வளர்ந்து விரணமுண்டாக்குமாதலால், பிரதிதினம் இராத்திரியில் குளம்புகளைச் சுத்தமாய்த் துடைக்கவேண்டும்.

24. குதிரையைக் கழுவினவுடனே, நன்றாய்த் துடைத்து மூடவேண்டும். எனெனில் அப்படிச் செய்யாவிடில் ஒருசமயம் சலதோஷ முண்டாகும்.

25. குதிரை சவாரியிலிருந்து வந்தவுடனே முதலாவது, உஷ்ணம் நீங்கிக் குளிர்ச்சியடையுமட்டும் அதை உலர்த்திவைக்கவேண்டும். இல்லாவிட்டால் சலதோஷமுண்டாக எதுவாகும்.

26. இரண்டாவது, முதலில் வைக்கோலாலும், பிறகு புருசாலும், நன்றாய் ஈரம்போம்படி தேய்க்கவேண்டும். இதனால் குதிரையின்மேல் படிந்திருக்கும், மண், தூசு, வியர்வையெல்லாம் நீங்கி, பசிதீபனம் உண்டாகும். குதிரையும் தேகாரோக்கியமடையும். (குதிரைக்கு மிகப் பசியாயிருந்தால் தேய்க்கும்போதே கொஞ்சம் புல் கொடுக்கலாம்.)

27. வியர்வையும், உஷ்ணமும் நீங்கியபின் தீனியெடுக்கப் பிரியமாயிருந்தால் தீனிவைத்து அதை யது தின்னும்வரையில் பக்கத்திலிருக்கவேண்டும். எனெனில் அது தீனியில்லாமலிருக்க முடியாது. அப்படியிருந்தும் நாம் மறந்துவிட்டால், முறையிட்டுக்கொள்ள அதற்குத் தெரியாது.

28. குதிரையானது அலுத்துக் களைப்படைந்து வந்த மறுநாள் காலையில் அதனுடைய கால்களைக் கைகளால் நன்றாய்த் தேய்க்கவேண்டும். அப்போதுதான் சீக்கிரமாய்க் கால்நோய் நீங்கும். அன்றியும் முள் முதலியன விருப்பினும் தெரியும். குதிரையும் சௌக்கியமாய்த் தீனி தின்னும்.

29. குதிரைக்கு நாள்தோறும் கொஞ்சம் சவாரியிருந்துகொண்டே யிருக்கவேண்டும். இல்லாவிட்டால் வியாதிக்கிடமாகும்.

30. அடிக்கடி குதிரையின் கால்களையும் குளம்புகளையும் பார்வையிடவேண்டும். எனெனில் அந்தவிடத்தில் நேரிடும் காயங்களையாவது, வியாதியையாவது, அசாக்கிரதையாய் விட்டுவிட்டால் சீக்கிரத்தில் அபாயம் நேரிடும்.

31. ஒவ்வொரு இரவும் குளம்பிற்கும் இலாடத்திற்கும் இடையில் எதாவது கல்லிருக்கிறதா வென்று கவனித்துப் பார்க்கவேண்டும். எனெனில் கல்லிருந்தால் இரவெல்லாம் குதிரை அந்தக் காலில் நிற்பதால் பொழுதுவிடிவதற்குமுன் நொண்டியாகும்.

32. 3 அல்லது 4 வாரத்திற்கொருமுறை லாடத்தை மாற்றிக்கொண்டு வரவேண்டும். எனெனில் குளம்பு சதா வளர்ந்துக்கொண்டேயிருப்பதால் குளம்பில் அல்லது லாடத்தில் நேரிடும் குற்றத்தை ஆலசியமின்றிச் சரிப்படுத்தவேண்டுமல்லவா?

33. குளம்பின் உட்சவ்வையும், தசையையும் ஒருபோதுஞ் சீவக்கூடாது. நுனிக்குளம்பையுங் கூட வெட்டக்கூடாது. வெட்டினால் இயற்கையாயுண்டாயிருக்கும் வலிவுபோய், மற்றுமுள்ள பலவகைத் துன்பத்திற் குட்படுத்தும். மேலும் குளம்பு சுருங்கி மெலிந்துபோம்.

34. லாடம் பளுவாயிருந்தால் அது அதி சீக்கிரத்தில் தேய்ந்துபோவதுடன் குதிரைக்காலின் வலிமை குறைந்து, சீக்கிரத்தில் களைப்படையும்.

35. லாடம் குதிரைக்குளம்பு எவ்வளவோ அவ்வளவிருக்கவேண்டும். லாடம் சிறிதாயிருந்தால் குளம்புக்குக் கெடுதியுண்டு. ஏனெனில் லாடம் எவ்வளவோ அவ்வளவிற்கு குளம்பு தேய்ந்து போம்.

36. குளம்பின் மேற்பாகத்தை எப்போதுஞ் சீவக்கூடாது. மேலிருக்கும் கடினபாகம் நீங்கினால் குளம்பு உருமாறி மெலிவடையும்.

37. லாடமடிப்பதற்கு வேண்டிய அளவிற்கு மேல் ஆணிகளை உபயோகப்படுத்தக்கூடாது. உபயோகப்படுத்தினால் குளம்பு நசுங்கி வெடித்துப் போம்.

38. குளம்பின் ஓரத்தை ஒருபோதும் அதிகமாய் வெட்டக்கூடாது. காதினுட்புறத்திலுள்ள மயிரையுங் கத்தரிக்கக்கூடாது. குளம்பை வெட்டுவதனால் குளம்பில் எரிச்சலும் புண்ணுமுண்டாகும். காதிலுள்ள மயிரோ அளவுக்கு மிஞ்சின சீதோஷ்ணங்களினால் காதின் உட்புறத்திலுள்ள நாடி, நரம்புகளுக்குண்டாகும் கெடுதலினின்று காப்பதுடன், தூசு முதலிய அணுக்கள் உட்செல்லாத வண்ணந் தடுக்கும்.

39. சவாரியிலிருந்து வந்த உடனே குதிரைகளுக்குத் தீனி கொடுக்கக்கூடாது. அலுப்பால் தீனிப்பைக்கு நன்றாய்ச் சீரணஞ்செய்யுஞ் சக்தி குறைந்திருக்கும். தீனி எடுத்தாலும் குதிரை சுகமடையாது. இளைப்பாறினஉடன் தீனி கொடுக்கலாம்.

பக்ஷிகளின் பாஷை.

சிலநாளைக்குமுன்னே எங்கள் வீட்டுப் புழைக்கடையில் இரண்டு சிட்டுக்குருவிகள் ஒரு சிறிய மாமரத்தின்மீது உட்கார்ந்து மிகக் கொடுமையாகப் பிரசண்ட யுத்தம் செய்துகொண்டிருந்தன. அவைகளுக்கு யுத்தத்திலிருந்த ஆவேசத்தில் உயிரிழக்கும்படியான அபாயம் வருவதுகூடக் கண்ணுக்குப் புலப்படவில்லை. அவை சண்டை போட்டுக்கொண்டிருந்த மும்மரத்தைக் கண்டு ஒரு கொடிய பூனை எளிதாக இரை தேடிக்கொள்வதற்கு இதுவே ஏற்ற தருணமென்றெண்ணி அவற்றிற்குத் தெரியாமலே அவைகளின் அருகே போய் விட்டது. அண்டையில் வேலியின்மீது உட்கார்ந்திருந்த மற்றொரு குருவி இதைப்பார்த்து அந்த நிமிஷமே அந்தப் பக்ஷிகளுக்கு நேரிடுவதான அபாயத்தைத் தெரிவிக்கக் கீச்சுக்கீச்சு என்று கூவியது. அதைக் கேட்டவுடனே சண்டை போட்டுக்கொண்டிருந்த பறவைகளிரண்டும் தங்கள் போராட்டத்தை அவ்வளவோடு திடீரென்று முடித்துத் தமக்கிருந்த கோபதாபங்களையும்ஒழித்து, ஆபத்துக் காலத்தில் அறிக்கைசெய்து தம்மை உயிரிழக்காதபடி படைக்காவலன்போலப் பேருதவி செய்த உயிர்த்தோழனுடனே கூடிப் பறந்து போய்விட்டன. இதனால் பறவைகளுக்கும் தமது கருத்தை ஏதோ ஒருவகையில் தெளிவாக விளக்கும்படியான சாமர்த்தியமுண்டென்பது நன்றாக விளங்குகின்றது. ஏனெனில், மனிதர்கள் செய்யும் எச்சரிக்கையான குறிப்புகளை அவரது நண்பர்கள் நன்றாய்த் தெரிந்து முன்ஜாக்கிரதைப் படுவதுபோல, இப்பறவைகளும் தமது நண்பனுடைய சொல்லைக் கேட்டு உயிரைக் காப்பாற்றிக்கொண்டனவல்லவா?

ஜீவராசிகளைக் காப்பது விரதம்.

இவ்வுலகத்திலே நம்மைச் சுற்றிலுமுள்ள பொருள்கள் பலவற்றையும் நாம் சற்று நிதானித்துப் பார்ப்போமானால், எங்கேபார்த்தாலும் ஜீவஜந்துக்கள் எண்ணிறந்தவையாய் நிறைந்திருப்பது நமக்குப் புலப்படுமல்லவா? ஆயினும் இவ்வளவு ஜீவராசிகளும் எதற்காகப் படைக்கப்பட்டிருக்கின்றனவோ அதுமாத்திர மொருவருக்கும் தெரியாமல் காடாந்தகாரமாயிருக்கின்றது. உயிர் வாழ்க்கையென்றால், ஒவ்வொருவரும் மானிட உயிரைப் பற்றிமாத்திரமே நினைப்பார்கள். ஆயினும் கோடிக்கணக்காகப் படைக்கப்பட்டிருக்கின்ற மானிட ஜீவன்களை, சங்கம், பிருந்தம், பதுமம் முதலான எண்களுக்கும் அடங்காது அமிதமாகப் படைக்கப்பட்டிருக்கின்ற பசு பக்ஷி மிருகாதிகளான வாயில்லாத எளிய ஜீவன்களுடனே சற்று ஒப்பிட்டுப் பாருங்கள். இவற்றில் மனிதஜாதி மற்றெல்லா ஜீவன்களிலும் சிறந்ததென்பதை எவனும் மறுக்கமாட்டான்; மறுக்க மனத்தினாலும் நினையான். இப்படி நாம் மேன்மைபெற்றிருப்பதனாலேயே மற்ற எளிய ஜந்துக்கள் நீசமென்று நிந்திக்கத்தக்கவையாகுமோ? நமது போஷணத்திற்குப் பாத்திரமல்லவென நாம் கைவிடத்தக்கவையாகுமோ? ஒருபோதும் ஆகா.

அந்த ஜீவன்களில் சில ஒருநாளேயிருந்து போய்விடுகின்றன; சில ஒருவாரமிருக்கின்றன; சில ஒருமாதமிருக்கின்றன; சில ஒருவருஷமிருக்கின்றன. இப்படி இவை யாவும் விளக்கொளிபோலத் தோன்றி மறைவதனாலுண்டாகும் பயனின்னதென்று ஊகித்தறிய எவனாலாயினும் ஆகுமோ! இவ்வுலகம் கடவுளது படைப்பும், இதிலுள்ள எல்லா ஜீவன்களும் அவனது கைவேலையுமாயிருக்கின்றனவென்றால், அவைகளின் உற்பத்தியினால் ஒரு நன்மையுமில்லை யென்று நினைக்கலாகுமோ? அவ்வாறு நினைத்தால் அது, அற்புதமான சாமர்த்தியமுள்ள ஜகதீசன், ஒருவனுக்கும் ஒரு பயனுமில்லாமல் உயிர்களை வருத்தி இம்சிக்கவும் அதனால் தான் களிப்படையவுமே, தனக்கு வீண் விளையாட்டுப் பொருள்களாக எண்ணிறந்த ஜீவராசிகளைப் படைத்திருக்கிறானென்று கருதுவதுபோலாகுமன்றோ? நண்பர்களே! இது நாஸ்திக வாதத்தினும் நீசமானதாகும்.

ஆதலால் நாம் நமது உயிர்வாழ்க்கை உபயோக முள்ளதென்று நினைத்து நம்முயிரை எவ்வாறு பாதுகாக்கிறோமோ, அவ்வாறே ஆண்டவனால் படைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு பிராணியும் ஏதோ நன்மைக்காகவே உண்டாக்கப்பட்டிருக் கின்றதென வெண்ணி எல்லாவுயிர்களையும் அன் புடன் ஆதரித்து வரக்கடவோம்.

மறவாமல் செய்யவேண்டிய காரியங்கள்.

நீங்கள் வைத்திருக்கும் வாயில்லா ஜந்துக்க ளுக்கு அவசியமாகச் செய்யவேண்டிய காரியங் களை முதலில் செய்து முடித்துவிட்டு அதன் பிறகே பள்ளிக்கூடத்திற்காயினும் வேறெந்த வேலைக்காயினும் போகவேண்டும்.

வீட்டிலேயே கட்டிவைத்து வளர்க்கிற நாயிருந் தால், அதைப் பிரதிதினம் காலையில் அவிழ்த்து விட்டுச் சற்றுதூரம் ஓடித் திரிந்துவரும்படி செய் வது முதன்மையான காரியம். அது கட்டிவைத் திருக்குமிடம் ஈரமில்லாமல் உலர்ந்து குளிருக்கு அடக்கமாகக் கம்மென்றிருக்கிறதாவென்று பார் த்து, சமீபத்தில் தண்ணீரும் வைக்கவேண்டும்.

குதிரைமீது தாங்கமாட்டாத சுமையேற்றி அதன் மீது நீயும் ஏறிக்கொண்டு போகாதே. நெடுந்தூ ரம் பிரயாணம் செய்யவேண்டியிருந்தால் குதி ரையை மெதுவாக ஓட்டிக்கொண்டு போகவேண் டும். தூரத்தினால் அப்புறம் அது பலம் குன்றிப் போம். குதிரைக்குத் தீனிப்பை சிறியதாகையால், அதற்கு அடிக்கடி தீனி போட்டுக்கொண்டிருக் கவேண்டும்.

நாம் வைத்திருக்கிற வாயில்லா ஜந்துக்கள் நம் மைவிட்டுப் போய்விட்டால் அது நமக்கே அவ மானமாகும்.

பூனைகளையும் இப்படியே பக்ஷமாக வளர்க்க வேண்டும். பூனைகளை நன்றாகப் பழக்கினால் அதுவும் தன்னை வளர்க்கும் யஜமானனிடத்தில் அன்புள்ளதாயிருக்கும்.

உயிருள்ள ஜந்து எதுவாயினும் ஒன்றின்மீதும் கல்லெடுத்து எறியாதே.

வில்லுள்ள கொடிய பொறிகளை ஒரு பொழு தும் கையாளாதே.

ஏதேனும் ஒரு ஜந்துவைக் கொல்லவேண்டி யது அவசியமானால், அந்தக் கொலையை உன்னால் கூடியவரை அதி சீக்கிரமாகச் செய்து முடிக்க வேண்டும்.

உன் பார்வையில் வருகிற ஒவ்வொரு பிராணி யும் சந்தோஷமாயிருக்கும்படி செய்யப் பாடுபட வேண்டும்.

நாயான பையனும் பையனான நாயும்.

ஒருநாள் கோபாலன் என்பவன் அவனது நாயை மிகவும் துன்புறுத்தக் கண்டு தகப்பன், 'அப்பா குழந்தாய்! உனது நாயை வருத்தாதே' என்றான். "நான் இதனோடு விளையாடிக்கொண்டன்றோ இருக்கிறேன்; இதைத் துன்பப் படுத்துகிறேனென்று சொல்லுகிறீர்களே" என மகன் சொல்ல "சீக்கிரம் போய் அதற்குக் கொஞ்சம் பழஞ்சோறு வாங்கிவை; அது மிகவும் பசித்திருப்பது போல் காண்கிறது" என்றான். அது கேட்டுப் பிள்ளை "அதற்கென்ன? மெதுவாக ஆகட்டுமே. நாய்க்காகக் கூலிக்காரப் பையன்போல ஓடித் திரியச் சொல்லுகிறீர்களே" என்று முணுமுணுத்தான்.

கொஞ்சநேரத்துக்கெல்லாம் மறுபடியும் நாயினது சத்தம் அதிகமாயிற்று. அதைக்கேட்கப் பொறாமல் தகப்பனார். "பிள்ளாய்! என்ன சத்தமுண்டாக்குகி றாய்? ஏன் அப்படி அதை உபத்திரவிக்கிறாய்" என, மகன்,

"சின்னவண்டி ஒன்று ஏற்பாடு செய்கிறோம் அப்பா; அதில் நானும் தங்கை யுமாகக் கல்லை நிரப்பிவிட்டு, இந்த நாய் அதை இழுத்தோடும்படி செய்யப் போகிறோம். வேடிக்கையாயிராதா?" என்றான்.

"ஐயோ பாவம்! நமது சிறிய நாய்க்குட்டியா கல்வண்டி யிழுக்கும்? இப்ப டிப்பட்ட காரியமொன்றுஞ் செய்யலாகாது" என்று தகப்பன் சொல்ல, "ஏன் அப்படிச் சொல்லுகிறீர்? நாய்க்கு அது கஷ்டமாகவே யிராதே! நாய்களும் நம் மைப்போல் குழந்தைகளா என்ன? இவை எல்லாம் அவைகளுக்கு மிகவும் பிரி யமல்லவா?" என்றான். "அப்படியா, ஒருநாளைக்காவது உன்னை நாயாக்கி அதைப்போலச் செய்யும்படி அடிக்கவேண்டும் என்று நினைக்கிறேன் பையலே! அப்போது அதன் வருத்தம் உனக்குத் தெரியவரும். இனி நீ இவ்விதமான கொடுங்காரியம் செய்தால் நான் உன்னைத் தண்டிக்கும்படி வரும்" என்று அதட்டித் தகப்பனார் அந்தத் தீங்கை நிறுத்திப்போட்டார்.

சிறிதுநேரத்திற்குப் பிறகு கோபாலன் நாற்காலியில் சாய்ந்து நடந்த சங் கதிகளை நினைத்துக்கொண்டு அயர்ந்து நித்திரைபோனான். அப்பொழுது ஒரு தள்ளாத கிழவி கையில் கோல்கொண்டு தகப்பனார் இருந்த இடத்தில் உட்கார்ந்திருப்பதுபோல் அவனுக்குத் தோன்றிற்று.

"பையா! நான் இதோ வந்திருக்கிறேன்; இப்போது என்ன சொல்லுகி றாய்" என்று அவள் கேட்க, அவன் பதில் சொல்லத் தோன்றாமல் சும்மா விருந்துவிட்டான். "நான் ஆர் தெரியுமா" என்று சொல்லிக்கொண்டு காலில் மாட்டியிருந்த மிதியடியைச் சத்தம் செய்துகொண்டு அவள் இரண்டு மூன்று தப்படி நடந்து வரவே, பையனுக்குப் பயமுண்டாகியது. "நான் ஒரு தேவதை" என்றாள். பிறகு கொஞ்சம் பயந் தெளிந்ததாயினும் அவன் ஒன் றும் பேசாமல் இருந்தான். அப்போது அக்கிழவி அவனைச்சுற்றி வெண்மை யான ஒரு கோடிட்டுத் தன் கையிலிருந்த தடியால் அவன் நாயைத் தட்டினாள். உடனே அந்த மிருகம் அரைக்கச்சையும் கழுத்துப்பட்டையுமாகத் தன்னைப் போல ஒரு சிறுவிளையாட்டுத் தோழனாக நிற்பதைக் கண்டு கோபாலன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான்; சந்தோஷத்தோடு தனது தகப்பனைக் கூவும்படி வாயைத் திறக்க, தனது குரலானது நாய் குலைப்பதுபோல் தோன்றியது. கைக ளிரண்டிலும் மயிரும் நகங்களுமுண்டாகி நாய்த் தன்மையைக் காட்டின, குதித் தெழுந்திருக்க முயலுகையில் நாலுகாலால் ஊன்றி நிற்பதைக் கண்டான். இதென்ன வினோதம்? இந்த தேவதை நாய்க்குட்டியை ஒரு பையனாகவும் என்னை ஒரு நாய்க்குட்டியாகவும் மாற்றிவிட்டதே என்று அவன் துக்கங் கொண்டு "ஏனிப்படிச் செய்தாய்" என்று கேட்க முயலுகையில், தனது சப்தம் குலைப்பதுபோலாயிற்று. அதைக் கேட்டு அந்த நாய்ப்பையன் "சீச்சீ நாயே! குலைக்காதே" என்று தலையில் ஒரு தடியினால் தட்டினான். "அப்போது அந்த நாயை வருத்தப்படுத்தாதே" என்று தனது தகப்பனார் குரல்போல் சப்தம் ஒன்று கிளம்பிற்று. அந்தப் பையன் "அதெல்லாம் நாய்க்கு வலிக்காது. அவைக ளுக்கு இஷ்டந்தான்" என்றான்.

பிறகு இன்னுமதிகமாக அடிபடாமலிருக்கும்பொருட்டு அந்தப் பையனான நாய் பெரிய நாற்காலியின் கீழே போய்ப் பதுங்கிக்கொண்டது. அப்போது அந்த நாய்க்குட்டிக்குப் பசி மிகவும் அதிகம்! ஏதாவது தின்ன அகப்படாதா என்று மிகுந்த ஆவலோடு அது தவித்தது. தண்ணீரில்லாமல் நாவெல்லாம் உலர்ந்து வருந்தியது. சற்றுநேரம் சென்றதும் வருத்தம் சகியாமல் தனது சிறு எஜமானன் காலை நக்கிற்று. "சீ! தூர நட" என்று அந்த நாய்ப்பையன் உதைத்துத் தள்ளவே, அது ஊளையிட்டுக்கொண்டு தோட்டத்திற்கு ஓடிப் போயிற்று. அந்த நாய்ப்பையல் ஒரு பெரிய கல்லை எடுத்துப்போட்டு அதன் காலில் காயம் உண்டாக்கினான். அந்தப் பையனான நாய் அதிகமாய் ஊளை யிட்டுக்கொண்டு புதர்கள் மறைவில் பதுங்கிக்கொண்டது.

"அப்படி செய்யலாமா" என்று தகப்பனார் கேட்க, "நாய்தானே! அவைக ளுக்கு இதெல்லாம் லக்ஷியமா என்ன? அவைகளுக்கு வருத்தமே தெரியாதே" என்றான். இதெல்லாம் கேட்டுப் பையனாகிய நாய் விதியை நொந்து கொண்டு இரவில் இருட்டியபிறகு குளிரினால் வருந்தி நடுக்கமுற்று வீட்டுக் குள்ளே போகும்படி கதவண்டை குலைத்துக்கொண்டுவந்து நின்றது. "ஆர்து" என்று உள்ளேயிருந்து குரல் வரவும், நாய் முன்னங்கால்களைத் தூக்கி எட்டிப்

பார்த்தது: அப்போது அந்த நாய்ப்பையல், "அப்பா நாய்தான் வந்திருக்கிறது" என, "உள்ளே வாவிடு" என்றார் தகப்பனார். "இதோ ஒரு நொடிக்குள் விடுகிறேன்" என்று சொல்லிவிட்டு அவன் சும்மா இருந்துவிட்டான். ஒரு நொடியும்போய் ஒரு நாழிகையும் ஆயிற்று என்றாலும், அந்த எளிய நாயை ஒருவரும் உள்ளே விடவேயில்லை. அந்த நாய்ப்பையல் அந்த நாயைப்பற்றி நினைவு வைக்கவேஇல்லை. பிறகு தனது படுக்கையில் குளிருக்கு அடக்கமாகத் தான் போய்ப் படுத்தபொழுது அந்த நாய் மறுபடியும் குலைத்தசத்தம் அவன் காதில் விழுந்தது. அப்பொழுதும் அதை உள்ளே விடவில்லை. இனி எழுந்திருந்து போகமுடியாமல் அந்த நாய் வெளியிலேயே கிடக்கவேண்டியதுதான் என்று தனக்குள்ளே நினைத்துக்கொண்டு சுகமாகப் பஞ்சணையில் படுத்து நித்திரைபோனான். நாயோ குளிரினால்வருந்திக் கதவுக்கருகில் ஒண்டிக்கொண்டு நின்றிருந்தது.

இப்படி இருக்கையில் கோபாலனது அருகில் அந்தக் கிழவி மறுபடியும் முன்போல் தோன்றி, "அப்பா, நாயாயிருப்பது என்னவாயிருக்கிறது" என, அம்மம்மா "என்னைத் தயவுசெய்து மறுபடியும் சிறு பையனாக்கிவிடு. எனக்குக் கொஞ்சமேனும் இப்படியிருக்க இஷ்டமேயில்லை" என்று வெகு வினயமாக வேண்டினான். "உன்னுடைய குணத்தையும் நடத்தையையும் பார்த்தால் மறுபடியும் நீ பையனாகத் தகுந்தவனென்று உனக்கே தோன்றுகிறதா" உன்னை இப்படியே "இன்னஞ் சிறிதுகாலம் நாய்ப்பிறப்பாகவே வைத்திருப்பது எனக்கு மிகவும் விருப்பம்" என்று சொல்லிவிட்டு அந்தத் தேவதை மறைந்துபோய் விட்டது. பிறகு கோபாலன் கண்ணை விழித்துப் பார்க்கையில் முன்போலவே தான் நாற்காலியில் சாய்ந்திருப்பதையும், தனது நாய் தன் காலை நக்கிக்கொண்டிருப்பதையும் கண்டான். இதுவரைக்கும் உண்டானவையெல்லாம் நினைவோ கனவோ என்று செம்மையாய் அறிந்துகொள்ளும்பொருட்டு அவன் குதித்தெழுந்து தனது கைகால்களையும் தனது உடுப்புகளையும் நன்றாய் தொட்டுத் தடவிப்பார்த்துச் சந்தேகந் தெளிந்துகொண்டான்.

மறுபடியும் "பையனாய் விட்டேனே" என்று அவன் பலதரம் கூச்சலிடவே, தகப்பனார் கிட்டவந்து, அப்பா, இவ்வளவுநேரம் சொப்பனத்திலிருந்தாற் போலிருக்கிறது. உன் கூச்சலைக் கேட்டு உன்னைப் பையனென்று சொல்லாமல் என்னவென்று நினைப்பார்கள் என்றார். பிறகு மாடியைவிட்டுக் கீழேயிறங்கி ஓடிவந்து இலை நிறையச் சாதம் கொண்டுபோய் நாய்க்குட்டிக்கு வைத்தான். பிறகு அதுமுதல் அவன் நாயையாவது வேறெந்த ஜெந்துக்களையாவது பறவைகளையாவது வருத்தினதே இல்லை.

"என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை யறம்."

என்று நாயனார் கூறியபடி புழு பூச்சி முதலான அற்பப் பிராணிகளின் உடலை வெயில் எரிப்பதுபோல அன்பில்லாதவர்களை அறக் கடவுள் தண்டிப்பார் என்று அறிக.

கழுதை.

கழுதை பார்வைக்குக் குதிரைக்குட்டியைப்போல் காணப்பட்டபோதிலும் அதைவிடச் சிறியது. அது குதிரையைக் காட்டிலும் நீண்ட காதுகளும் குறுகிய வால்களுமுடையது.

இத்தேசத்தில் முக்கியமாக வண்ணார் தங்கள் மூட்டையைச் சுமந்து போவதற்கு உபயோகிப்பதினால் அதை மற்றவர்கள் அலக்ஷியம் செய்கிறார்கள். ஆயினும் அது மனிதர்களுக்கு உபயோகமான வேலைகளைச் செய்யத்தக்கதாயிருக்கிறது. உலர்ந்த புல்லைத் தின்று திருப்தியடையும்.

பூமியின் சில விடங்களில் கழுதை பெரிதாயும் காத்திரமாயுமிருக்கின்றது. அதன்மேலேறி விசேஷமாய்ச் சவாரிசெய்கிறார்கள். முற்காலத்தில் யூதர்களில் தனவான்கள் தங்கள் தேசத்தில் குதிரைகள் அகப்படாமையால் கழுதையின்மேலேறிச் சவாரிசெய்தார்கள். வெள்ளைக் கழுதைகள் அபூர்வமும் விலையுயர்ந்தனவுமாதலால் நியாயாதிபதிகளுக்கே உரியனவென்று மதிக்கப்பட்டன. சாமுவேல் என்னும் தீர்க்கதரிசி சவுல் என்பவனைப் பார்த்து ராஜாவாக இருக்கச் சொன்னபோது சவுல், காணாமல்போன தன் தகப்பனாருடைய கழுதைகளை வாகனமாகத் தேடினான். ஆகையால் அவைகட்குக் கோவேறுகழுதைகளென்று பெயர் வந்தது. அவன் காலத்திற்குப்பிறகு அத்தேசத்திற்கு அநேகம் நேர்த்தியான குதிரைகளைக் கொண்டுவந்து பிரபுக்களும் ராஜாக்களும் அவைகளின்மேல் ஏறிச் சவாரிசெய்ய இஷ்டப்பட்டார்கள். ஆதலால் கழுதைகளை ஏழைஜனங்கள் உபயோகப்படுத்திக்கொண்டார்கள்.

கழுதை மந்தமும் நிதானமுமுள்ள ஜந்துவானாலும் தன் எஜமானனை அறிந்துகொள்ளும் திறமையுள்ளது. அவன் சில தருணங்களில் மனிதக்கூட்டத்திலிருந்தாலும் தன் எஜமானனைக் கண்டுபிடிக்கும். மனிதர் கடவுளிடத்தில் எவ்வளவு நன்றியுடன் கீழ்ப்படிகிறார்களோ அதைவிடக் கழுதை தன் எஜமானனிடத்தில் அதிகமான நன்றியுடையதாய்க் காணப்படுகிறது. நம்முடைய வாழ்நாளெல்லாம் நமக்கு உணவு அளித்துப் பாதுகாக்கிற கடவுளை அடிக்கடி நாம் மறந்துவிடுகிறோமே உசிதமா? ஒரு கழுதை சொல்லிய தன் கதையை இதனடியிற் சுருக்கிச் சொல்லுகிறோம். அது படிக்கிறவர்களுக்கு இன்பமாயிருக்கும்.

நான் ஒரு குதிரை லாயத்தில் பிறந்தேன். என் பெயர் குட்டி. அதில் வேறு குதிரைகளுமிருந்தன. அந்த லாயம் இருட்டாகி அதிக அழுக்கும் குப்பையுமாயிருந்தாலும் எனக்கு நல்ல போஜனம் கிடைத்தமையால் நான் அதிக சுகமென்று எண்ணிக்கொண்டிருந்தேன். மற்றவர்கள் அதிக ஈனமாயிருந்ததை நான் விசாரித்ததில் நீ இனிமேலறிந்துகொள்வாயென்றார்கள். என்னையும் மற்றக் கழுதைகளைப்போல் பிரதிதினமும் காலைமுதல் சமுத்திரக்கரையோரமாய் மணலில் பகல்முழுதும் சவாரி செய்வார்களென்று அறிந்துகொண்டேன்.

அதேமாதிரியாக எனக்குத் தண்ணீர்கூட அகப்படாதபடிக்கு நன்றாய் அடித்து ஓடும்படி ஓட்டுவார்கள். கடைசியில் என்னை ஐரோப்பிய குழந்தை ஒன்றை ஏற்றிக்கொண்டு போம்படி ஏற்படுத்தினார்கள். அவர்கள் என்னை உபத்திரவம் செய்யாமல் நல்ல சாப்பாடுபோட்டு நன்றாய் உலர்ந்த லாயத்தில் கட்டி வைத்துக்கொண்டிருந்ததனால் மற்றக் கழுதைகளைப்பார்க்கிலும் சந்தோஷமாயிருப்பேன். நான் சவாரி ஏற்றிக்கொண்டுபோகிற பிரதிதினமும் எனக்குச் சர்க்கரைக்கட்டியாவது பழமாவது வேறு சுவையுள்ள பதார்த்தமாவது கொடுப்பது வழக்கம். என்னைப் பச்சைப்புல் அதிகமாக உள்ள நிலத்தில் மேய ஓட்டி, பின்பு சாயங்காலம் பிள்ளைகள் வந்து வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோவார்கள். தாற்றுக்கோலால் வண்டிக்காரப்பையன் குத்துகிறமாதிரி இவர்கள் செய்யாமல் என்மேல் சவாரிசெய்யும் சிறுமி எனக்கு முன்னே செல்ல நான் வழி தெரிந்து போவேன். இப்படி 3 வருஷகாலம் சுகமான வீட்டிலிருந்தபடியால் என் வாழ்நாளை எல்லாம் சந்தோஷமாகக் கழிக்கும்படி கடவுள் கடாக்ஷிப்பாரென்று நினைத்திருந்தேன். ஐயோ! இந்தக் கடாக்ஷம் நான்பெறுமற்போகலாயிற்று. ஒருநாள் அந்தச் சிறுபெண் குதிரைக்கொட்டிலுக்கு வந்து முகமலர்ச்சியில்லாமல் கண்ணீர் ததும்பத் தன் கையை என் கழுத்தின்மேல் போட்டுக் கட்டிக்கொண்டு சொன்னதாவது: ஆ! ஆ! என் செல்லக்குட்டியே, நாங்களெல்லோரும் நாளைக்குக் கப்பலேறி ஊருக்குப்போகிறோம். உன்னைக் கப்பலேற்றச் சரிப்படாதாகையால் விக்கிரயஞ்செய்யவேண்டுமென்று ஐயா சொல்லுகிறார். ஐயோ நான் என்னசெய்வேன் என்றது; அப்படியே அவர்கள் கப்பலேறிப் போகும்போது என்னை விக்கிரயித்து விட்டார்கள்.

கொண்டவனோ என்னைக் கட்டைவண்டியிற் கட்டிக் காய் கறி முதலான சுமைகளைப் போட்டுக் கடைக்குத் தினந்தோறும் ஓட்டிக்கொண்டுபோவான். கொடுமையே உருவாக உள்ள இந்த 12 வயது துஷ்டப்பையனை வண்டி ஓட்ட ஏற்படுத்தினதினால் அவனடித்த அடிகளால் கழுத்துப்பட்டை கட்டுகிற இடத்தில் புண்ணாய்விட்டது. அத்துடன் கடைவாய் கிழியும்படி கடிவாளத்தை வலித்து இழுப்பான். சூரிகத்தியாலென்னைக் குத்துவான். நான் துள்ளினால் நகைப்பான். நெஞ்சிலீரமிரக்கமென்பதில்லாமல் காலை 6 மணிக்கு வண்டியைக் கட்டி மாலை விளக்குவைத்த பிறகுதான் அவிழ்த்துவிடுவான். என்னை விலாப்பக்கங்களில் நன்றாய் ஜாட்டியால் அடித்துக் கூச்சலிட்டதினால் அவனுக்குத் தொண்டையும் கம்மிப்போய் பேசமாட்டாமல் வீடுபோய்ச் சேருவான். இரவில் எனக்குத் தகுந்த ஆதரணை இல்லாமல் கலப்பை, நுகத்தடி, மண்வெட்டி, இருப்புச்சால் முதலாகிய மரச்சாமான் இருப்புசாமான்போல் என்னை ஒரு மூலையில் விட்டு ஓடிப்போவான். நான் தூக்கமில்லாமல் என்னை முன்னே பாதுகாத்த சிறுபெண்மணியை நினைத்து என்னை இந்தக் கஷ்டநிலையில் விட்டுக் கப்பலேறிப்போய் மறந்துவிட்டார்களே என்று அழுவேன். இப்படி வருத்தப்பட்டு ஒருநாள் வண்டி இழுத்துப் போகையில் வண்டிக்காரனுக்கு நேசனான ஒரு பிள்ளை எதிரேவந்து, ஆ! ஆ! உன்னைத்தான் பார்க்கவேண்டுமென்றிருந்தேன், எப்போது நீ வீடுவந்து சேருவாயென்று கேட்க, அதற்கு வண்டிக்காரன் பொழுதுபட்டு ஏழுமணிக்குத்தான் வீடுவரக்கூடும் என்று சொல்லிக்கொண்டே என் கழுத்தின்மேல் கடுமையாகச் சாட்டையாலடித்தான். ஓகோ, அதேனப்படி யடிக்கிறாய் என்று சிநேகிதன் கேட்க, சிரித்து, வேடிக்கைக்கு அடிக்கிறேன் என்றான். இதென்ன கேடுகெட்ட வேடிக்கை! ஜீவகாருண்யசபையில் நானும் இன்னம் 120 பேரும் சேர்ந்திருக்கிறோம். நீ செய்கிற கொடுமைகளை நான் பார்த்திருக்கக்கூடாது; ஜெந்துக்களிடத்தில் பக்ஷமாயிருந்து ரக்ஷிக்கவேண்டுமென்று சபதம் செய்துகொண்டிருக்கிறோம். நாங்கள் மாஸமொருமுறை சபைகூடி, கவிகள் பாடுவதும் தேவாரம் முதலான தோத்திரங்களைப் பண்டிதர்கள் எடுத்துச் சொல்லி உபநியாசம் செய்வதைக் கேட்பதும் வழக்கம். அங்கே நீ செய்கிற கொடுமையைக் கேட்டால் உனக்குத் தண்டனை கிடைப்பது நிச்சயம். திட்டல், கட்குடித்தல் முதலான துர்வழக்கங்களை எங்கள் சபையைச் சேர்ந்தவர்கள் விலக்கவேண்டும் என்றான். ஓகோ அப்படியா? நான் அந்தச் சபையைச் சேரமாட்டேன், எனக்கு வண்டி ஓட்டுவதே தொழிலாக இருக்கிறதே என்று சொல்ல, வண்டி ஓட்டினாலென்ன இந்தத் தொழில் செய்வதினால்தான் எங்கள் சபையில் நீ சேரவேண்டும். நான் உன்னைப்போல் அழுக்குத் துணிமூட்டைகளை வண்டியிலேற்றி ஒரு கழுதையை அடித்தும் புடைத்தும் ஓட்டிக்கொண்டிருந்தேன். இப்போதோ அக்கொடுமைகளையெல்லாம் விட்டுவிட்டேன். அக்கழுதை சுபாவமாகவே வருத்தமில்லாமல் வண்டி இழுத்துக்கொண்டுபோய் வருகிறது என்று அந்த நேசன் சொன்னான். இதைக்கேட்டு அவன், நான் சற்று யோசித்துப் பார்க்கிறேன்; வாய்மொழிதந்து சத்தியம் செய்துகொடுத்த இரண்டுமூன்று தினங்களில் மறுபடி மறந்துவிடுவேன் என்று அச்சப்படுகிறேன் என்றான். அப்படி அச்சம் வேண்டாம் மாஸத்திலொருமுறை சேருமெங்கள் சபைக்கு வந்துபோனால் நீ செய்யும் சபதத்தை மறக்கமாட்டாய். இன்றை மாலை ஒரு சபை கூடுவார்கள் வந்துபார் என்றான். அப்ப

டியே அவன் அன்ற கூடிய சபைக்குப்போய்த் தன்பேரைப் பதிந்துகொண்டான். இப்போது ஒரு வருஷம் ஆய்விட்டது. எனக்கு வாயெடுத்துப் பேசத்தெரிந்தால் இப்படி கொடிய வண்டிக்கார தடிப்பப் பிள்ளைகளுக்குப் புத்திமதிசொல்லும் பெரியோர் பெருமாட்டிகளுக்கு என் வந்தனத்தைச் சொல்லுவேன். இப்போதும் நான் காப்நதிவண்டியில் கட்டப்பட்டுக் கடைத்தெருவிற்கு போய்வந்தாலும் முன்னே வண்டிக்காரப் பயல் எவ்வளவு வதைசெய்தானே அவ்வளவு பக்ஷமா யிப்போது இருக்கிறன்.

நாங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் இஷ்டமாயிருக்கிறோம். நான் அவனே நம்பவும் அவன் என் கழுத்துமேல் மெதுவாகத் தட்டிக்கொடுத்து என் பிரியமான குட்டிக்கழுதையே, உனக்குத் தீங்குசெய்துவந்தேனே, பாவி நான்! போன இடமெல்லாம் பள்ளமும் திட்டியுமாமே, அந்தப்பாவத்தை நினைத்து நினைத்து எனக்கு இன்னம் தீரவில்லை என்று மிருதுவான மொழிகளால் காதில் சொல்லுவதுமல்லாமல் நேற்றையதினம் ஒரு பெரியோர் சொன்ன குறளும் ஞாபகம் வருகிறதென்று அடியிற்குறித்த பாட்டையும் சொன்னன்:—

“எதிரதாக் காக்கு மறிவனர்க் கில்லை
யதிர வருவதோர் நோய்.”

கிளியின் வார வர்த்தமானம்.

கண்ணிகள்.

வினு.

கிளியேநீ யெங்குபோனுய் கிழமை யேழுமே
கேட்டுக்கண்டு செய்ததென்ன கிளத்துவாய் நீயென்ன
அந்தக்கிளி சொல்லுகின்ற தாதிநாளி ராவில்
சொந்தமான இங்குவிட்டுச் சோலையொன்றில் போனேன்.

விடை.

1. திங்கள்கிழமைக் காலைதன்னில் சிறந்தவருஷப் பிறப்புத்
தினமதனல் மனிதர்தங்கள் சிநேகர்வீடு தோறும்
சங்கராந்திப் பண்டிகைதான் சட்டமாக நடந்த
சம்பிரமத்தைக் கேட்டுமகிழச் சாருதலைக் கண்டேன்.
2. செவ்வாய்க்கிழமைக் காலைதன்னில் சிந்தையிலே யெண்ணித்
தேர்ந்துநானு மந்தவிதந் தேடிநாணத் தானும்
எவ்வமிலாப் பறவைவீட்டி லெய்திக்கூடி மகிழ்ந்தேன்.
3. புதன்கிழமை யுதயத்திலே புதுமைபல பேசிப்
புசித்துவாழக் கம்புதினை புன்செயிலே கண்டு
அதின்கதிரைக் கவ்வித்தின்ன ஆசைகொண்ட போதில்
அதற்குடையோன் துரத்திவந்தான் அவிடம்விட்டே யோடி;
4. வியாழக்கிழமை காலையிலே வேறுமர மொன்றில்
மேவிக்கூடு கட்ட நாங்கள் வேண்டியங்கே செல்ல,
மயானம்போலும் வாய்திறந்து மஞ்சட்கண்ணுப் பூனை
வந்துபிடிக்க நிற்கக்கண்டு வாடிநாங்கள் பயந்தோம்.
5. வெள்ளிக்கிழமை விடியுமுன்னே வெகுதூரம் பறந்து
வேறூர்காட்டிற் சென்று புதரில் வீற்றிருக்க அங்கு
துள்ளித்திரியுங் காலிமாடு சூழ்ந்த வோரிடைப்பெண்
சுமந்தபாற் குடங்கவிழ்ந்து சோர்ந்துகிடக்கக் கண்டோம்.
6. சனிக்கிழமைக் காலைதன்னில் சார்ந்தோர் மாத்தின்மேலே
சதிசெய்வேடர் கருத்தமாநாய்த் தாவிக்கிட்டக் கூடாத்
தனித்தபாய மற்றக்கொம்பில் தகுதியாக வேறித்
தஞ்சமென்ன வேபுகுந்து சவுக்கியமா யிருந்தோம்.
7. ஆதிவார முதயந்தன்னில் ஆலயகோ புரமேல்
ஆவலோடு ஏறியங்கே யடிக்குமணிக ளோசை
கீதவாத்தியத்தின் கோஷம் கேட்டுமகிழ்ந்து தேவன்
கிருபைநினைந்து புகழ்ந்தோமென்று—கிளியினிப்பாய்ச் சொன்னதே.

நீதி.

இந்தவாறு பறவையிரண்டும் இணங்கி வாழ்ந்திருக்க
நந்தமக்கள் கூடிலோக நாதனை வாழ்த் தாரோ?

(மகாராணி.)

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1901.